# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## 80 ஆவது இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம்

இந்தியாவின் 80 ஆவது சுதந்திர தினம் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் 2026 ஆகஸ்ட் 15 ஆம் திகதி மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. பிரதான நிகழ்வு இந்திய உயர் ஸ்தானிகரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டார். அத்துடன் 80 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாண்புமிகு இந்திய ஜனாதிபதி அவர்களால் தேசத்துக்கு ஆற்றிய உரையின் சாராம்சத்தையும் அவர் வாசித்தார்.

2. பல்வேறு நேர வலயங்களைக் கடந்து சூரியனின் பாதையைப் பின்பற்றி, இந்தியத் தூதரகங்களால் வரிசையாக இந்தியக் கொடி ஏற்றப்பட்ட ஓர் உலகளாவிய தொடர் ஓட்டமான, சூர்யபாத் மூவர்ணக் கொடி முன்னெடுப்பில் இந்த ஆண்டில் இந்திய உயர் ஸ்தானிகராலயம் பங்கேற்றது. காத்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகத்தை அடுத்து இலங்கையில் இந்திய மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டு தொடர்ந்து, மாலேயில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராயத்தால் ஏற்றப்பட்டது, ஒரு சூரிய உதயத்திலிருந்து அடுத்த நாள் சூரிய உதயம் வரை இந்த குறியீட்டு அஞ்சலோட்டம் நடைபெற்றது.

3. இக்கொண்டாட்டங்களுக்கு பல்வேறு இசை மற்றும் கலாசார நிகழ்வுகள் மேலும் மெருகூட்டியிருந்தன, குறிப்பாக வீரம் மற்றும் தேசப்பற்றினை குறிக்கும் பாடல்கள் இலங்கை கடற்படை இசை குழுவினரால் இசைக்கப்பட்டதுடன் பிரபலமான தேசப்பற்றுப் பாடல்களுக்கு சுவாமி விவேகானந்தா கலாசார நிலைய மாணவர்கள் தமது ஆற்றுகைகளை அரங்கேற்றியிருந்தனர்.

4. இந்திய உயர் ஸ்தானிகரும் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளும் இந்திய அமைதிப் படையினரின் நினைவுத் தூபியில், இலங்கையின் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்ட தம்மை தியாகம் செய்த இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

5. இந்த ஆண்டின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இந்திய உயர் ஸ்தானிகராலயமும் SVCCயும் இணைந்து மதுபானி ஓவிய செயலமர்வு, வார்லி (பழங்குடியினர்) ஓவிய செயலமர்வு,

குழந்தைகளுக்கான இந்தியா-இலங்கை மைத்ரி ஓவியப் போட்டி மற்றும் 'இந்தியா த்ரூ மை லென்ஸ்' என்ற தலைப்பிலான புகைப்படப் போட்டி ஆகியவற்றை நடத்தியிருந்தன. இதில், இலங்கை பங்கேற்பாளர்களால் படம்பிடிக்கப்பட்ட இந்தியாவின் புவியியல், கலாசாரம், உணவு வகைகள் மற்றும் மக்களின் தனித்துவமான படைப்புகள் இடம்பெற்றன. 80 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் விதமாக, 'பாரத் கோ ஜானியே' (இந்தியாவை அறிவோம்) வினாடி வினா ஒரு சிறப்புப் பதிப்பு உலகம் முழுவதும் நடத்தப்பட்டது. இதில், இலங்கையர்கள் பெருமளவான எண்ணிக்கையில் பங்கேற்றமை, இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மக்களுக்கு இடையேயான உறவுகளைப் பிரதிபலித்தது. இலங்கையின் வெற்றியாளர்கள், 2026 ஆகஸ்ட் 15 அன்று இந்திய இல்லத்தில் நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது கௌரவிக்கப்பட்டனர்.

6. இந்திய தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150 ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் முகமாக இந்த ஆண்டு முழுவதும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தது. இதில் கொழும்பிலுள்ள பல்வேறு பாடகர்களும் கலைஞர்களும் கலந்துகொண்டு பங்கேற்ற வந்தே மாதரம் பாடல் இசைத்தல், முன்னணி இந்திய பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் அப்பாடலை இசைத்தமை உள்ளிட்டவை அடங்கும், ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது, இந்திய உயர் ஸ்தானிகராலயம் 'ஹர் கர் திரங்கா' என்ற தலைப்பில் ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்தது. இக்கண்காட்சியில், தேசியக் கொடியின் வரலாறு மற்றும் முக்கியத்துவமும், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் தேசிய கீதம் ஆற்றிய பங்கு ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன.

7. 80 ஆவது சுதந்திர தினத்தைக் குறிக்கும் முகமாக கண்டியில் உள்ள துணை இந்திய உயர் ஸ்தானிகராலயம், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள கொன்சுலேட் ஜெனரல் காரியாலயங்கள் ஆகியவற்றால் பல்வேறு கலாசார நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

8. அன்றைய தினம் வீணை மேஸ்ட்ரோ ராஜேஷ் வைத்யா அவர்களும் இலங்கையின் பிரபல பாடகி யொஹானி அவர்களும் பங்கேற்ற விசேட இசை நிகழ்வான ஸ்வர் சங்கம் என்ற நிகழ்வும் இந்தியாவின் 80 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மேலும் இக்கொண்டாட்டங்களைக் குறிக்கும் முகமாக SVCC மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஹவ்லொக் சிட்டி மாலில் “India Fest 2026’ நடத்தப்பட்டது. இந்த இருநாள் கொண்டாட்டம் 2026 ஆகஸ்ட் 15-16 திகதிகளில் மிகவும் உற்சாகத்துடன்

நடத்தப்பட்ட அதேவேளை இந்திய நாகரிகம், கைவினை, உணவு, நேரடி நிகழ்வுகள், திரைப்பட காட்சிகள், மற்றும் ஏனைய கலாசார நிகழ்வுகள் இந்தியாவின் உயர்வான மரபினை பிரதிபலிக்கும் வகையில் நடத்தப்பட்டன.

*************

கொழும்பு
**17 ஆகஸ்ட் 2026**